DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

SPl.SC. 71/2024 & Spl.SC.No. 112/2025

PROSECUTION WITNESS No - PW- 1

| | | | |
|---|---|---|---|
| Name : | ஜெகதீசன் | Caste: | |
| Father Name | செல்வராஜ் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of February 2026.

1 வது மற்றும் 2 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது நாமக்கல் மாவட்டத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் உதவி புவியியலாளர் ஆக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 2023ம் ஆண்டு மண்டல புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி புவியியலாளராக பணியாற்றிய போது நாங்கள் எங்கள் துறையின் மண்டல இணை இயக்குநர் சென்னை இயக்குநர் அலுவலகத்தின் உத்தரவின் பேரில் அவரும் சிவகங்கை மாவட்ட புவியியல் துறை சார்ந்த ஜெகதீசன் என்பவரும் திருப்பத்தூர் செல்லும் சாலையில் தம்பிபட்டி அருகே சென்ற போது எங்களுக்கு எதிரே புதுக்கோட்டை திருப்பத்தூர் சாலையில் TN 72 CA 7507 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் வாகனத்தில் சுமார் 3 யூனிட் அளவுள்ள Msand ஏற்றிய வாகனம் வந்ததை நிறுத்தி சோதனை செய்த போது வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரிடம் கேட்ட போது அவரிடம் கனிமத்திற்கான உரிய நடைச்சீட்டு இல்லாததால் மேற்படி வாகனத்தை உரிய அனுமதியின்றி Msand ஏற்றி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தி வந்ததாக நாங்கள் விசாரித்த ஓட்டுநர் மதன்ராஜ் என்பவர் மீதும் வாகனத்தின் உரிமையாளர் கிருஷ்ணகுமார் என்பவர் மீதும் நான் ஒரு எழுத்துமூலமான புகாரை வாகனத்துடன் திருப்பத்தூர் நகர் காவல் நிலையம் சென்று வண்டியை மணலுடன் ஒப்படைத்து கொடுத்த புகார் என்னிடம்

காட்டப்படுவதுதான். மேற்படி புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்குறிப்பிட்ட TN 72 CA 7507 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் வாகனத்தை 3 யூனிட் MSand மணலுடன் கைப்பற்றி மகஜர் அத்தாட்சியிலும் நான் கையொப்பம் இட்டேன். மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அத்தாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள TN 72 CA 7507 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி தான் நான் கைப்பற்றியது. மேற்படி TN 72 CA 7507 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி **சா.பொ.1** ஆகு குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இந்த வழக்கு சம்பந்தமாக எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சுமார் 01.00 மணி இருக்கும். எனக்கு தனிப்பட்ட நபர் யார் மூலமாகவோ புகார் வந்ததா என்றால் இல்லை. இயக்குநரகத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நகல் எதையும் நான் தனியாக போலிசார் விசாரணையில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கு சம்பவத்தின் போது திருச்சி மண்டலத்தின் பணியாற்றி வந்தேன் என்றால் சரிதான். எங்களுக்கு வந்த உத்தரவு சிவகங்கை மாவட்ட பகுதியில் கண்காணிக்க உத்தரவு வந்ததால் வந்தோம். மேற்படி உத்தரவின் நகலையும் போலிசாரிடம் தனியாக சமர்பித்துள்ளேனா என்றால் இல்லை. சிவகங்கை மாவட்ட கனிம வளத்துறை சார்பில் தனியாக புகார் எதுவும் எங்களுக்கு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. MSand ல் சில வகைகள் உண்டு என்றால் சரிதான். MSand என்பது கல் உடைத்த பின் தூசியாக வரும் என்றால் சரிதான். சம்பவ நடந்த பகுதியில் அரசு அனுமதி பெற்ற கல் உடைக்கும் குவாரிகள் (Crusher ) நிறுவனம் எவ்வளவு உண்டு என்று விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. நடைச்சீட்டு என்பதற்கும் மணலை விற்பதற்கான உரிமம்

என்பதற்கும் வேறுபாடு உண்டு என்றால் சரிதான். MSand எங்கிருந்து எடுத்து வரப்பட்டது என்பதை என்னால் சொல்லமுடியுமா என்றால் அது குறித்து தனியாக நாங்கள் விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் மணல் இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் அது வெளிப்புறம் மட்டும் எடுக்கப்பட்ட படம் ஆகும். நாங்கள் மேற்குறிப்பிட்ட வண்டியை பிடித்த காலத்தில் MSand விற்பதற்கு அரசால் தடை உண்டால் என்றால் இல்லை. வண்டியை ஓட்டி வந்த ஓட்டுநரிடம் நடைச்சீட்டு எதுவும் கைப்பற்றினீர்களா என்றால் அது இல்லாததால் தான் ஓட்டுநரை கைது செய்தோம். ரூ.12,000 என குறிக்கப்பட்ட அனுமதிச்சீட்டு எங்களிடம் காட்டப்பட்ட நிலையில் அதை மறைத்து எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டு அதற்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்றால் இல்லை. இவ்வழக்கில் வண்டியின் உரிமையாளர் ஒரு பொறியாளர் என்பதை தெரிந்துகொண்டோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வண்டியின் ரூ.4,000 மதிப்புள்ள மணல் இருந்ததாக குறிப்பிட்டிருந்தது நான் எங்கு அளந்து பார்த்து அ.சா.ஆ.1 புகாரில் சொல்லவில்லை என்றும் அனுமான பேரில் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் கொடுத்தபுகாரில் வாசகங்கள் எழுதி முடிக்கப்பட்ட பகுதிக்கும் இப்படிக்கு என கையெழுத்திட்ட பகுதிக்கும் இடையே சிறிது இடைவெளி உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜரில் எங்களது அலுவலக முத்திரை இல்லை என்றால் சரிதான்.அ.சா.ஆ.2 கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் என்னுடையது தான். அதில் எதிரிகளின் கையெழுத்து பெறப்பட்டதா என்றால் இல்லை. நான் கொடுத்த புகாரில் அறிவேன் சாட்சியாக யாரும் கையெழுத்து போட்டார்களா என்றால் ஞாபகமில்லை. நாங்கள் வாகனத்தை கைப்பறிய இடத்திற்கும் திருப்பத்தூர் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இடைவெளி இருக்கும் என்றால் குறிப்பாக சொல்ல முடியவில்லை. கனிம வளத்துறை சட்டத்தின்படி புகார் கொடுப்பதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Msand எடுப்பதற்காக வண்டியின் ஓட்டுநர் உண்மையில் வைத்திருந்த நடைச்சீட்டை மறைத்து புள்ளி விவர கணக்கிற்காக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாகனத்தை நான் தனியாக புகைப்படம் எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் தொடர்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.17 17:54:49 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

SPl.SC. 71/2024 & Spl.SC.No. 112/2025

PROSECUTION WITNESS No - PW- 2

| | | | |
|---|---|---|---|
| Name : | செல்வபிரபு | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of February 2026.

1 வது மற்றும் 2 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன்.கடந்த 2023 ம் ஆண்டு திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 18.06.2023 ம் தேதி சுமார் மதியம் 01.00 மணியளவில் நான் நிலையத்தில் இருந்த போது கனிம புவியியல் துறையிலிருந்து நாங்கள் ஒரு வண்டியை பிடித்துள்ளோம் என்றும் அது குறித்த புகார் தரப்படுகிறது என்றும் இவ்வழக்கின் புகார்தாரர் ஜெகதீசன் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 102/2022 ன் படி இதச பிரிவு 379 மற்றும் 21(1) MMDR Act முதல் தகவல் அறிக்கை தயாரித்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்குறிப்பிட்ட புகாரை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து அதன் நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வழக்கு கோப்பை காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தான்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

புகார் பெறப்படுவதற்கு முன்பாக சம்பவ இடத்திற்கு சென்று சம்மந்தப்பட்ட வாகனத்தை பார்த்தேனா என்றால் இல்லை. காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். புகார் கொடுத்த அ.சா.1 ஜெகதீசன் என்பவரை விசாரித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேனா என்றால் அவர் கொடுத்த புகார் விவரங்களை கேட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அ.சா.1 ஜெகதீசன் கொடுத்த புகார் ஏற்கனவே எழுதிக்கொண்டு வரப்பட்ட புகார் என்றால் சரிதான். மேற்படி புகாரை யார் எழுதினார் தெரியுமா என்றால் அது புகார்தாரர் தான் எழுதினார். நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் போது நேரம் எவ்வளவு மணி என்றால் மதியம் 01.00 மணி ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் 2 வது பக்கத்தில் காலம் 12 ல் காலை 08.00 மணிக்கு பணியில் இருந்த போது என்று குறிப்பிட்டுள்ளதால் முதல் தகவல் அறிக்கை அப்போது தான் பதிவு செய்தேனா என்றால் இல்லை. காலை 08.00 மணியிலிருந்து அன்றைய தினம் நிலைய பொறுப்பில் இருந்ததால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். அ.சா.1 ஜெகதீசன் கொடுத்த புகாரை எவ்வித கேள்வியும் கேட்டு விசாரிக்கமால் எந்திரத்தனமாக முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் காலம் 16 ல் தகவல் கொடுத்தவரின் கையொப்பம் என்ற இடத்தில் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 புகாரில் 2 வது பக்கத்தில் புகார் பெறப்பட்டது என்ற எனது குறிப்பில் குற்ற எண்.102/2023 என்பதில் 20 என்பது திருத்தயும்

அதேபோல் பிரிவு 21 (1) என்பதில் 1 என்ற எழுத்து அடைப்பு குறிப்பில் திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் கொடுத்த புகாரை சரிவர பரிசீலனை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை தயாரித்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.17 17:55:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை.